**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 73/2018**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : கண்ணன் | **Caste** | : | |
| **Father's Name** | : தங்கம் | **Calling** | : | திண்டுக்கல் மேற்கு வட்டம் ரெட்டியார் சத்திரம் உள்வட்டம் - RI |
| **Village** | : பள்ளபட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | **Age** | : | 52 |
| | | **Dated** | : | 25.03.2025 |

**25.03.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–6 திரு. **கண்ணன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 6 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1ம் எதிரி இறப்பு**
**3ம் எதிரி ஆஜர்**
**2ம் எதிரி ஆஜரில்லை. 317Crpc Petition filed and allowed.**

1. நான் தற்போது திண்டுக்கல் மேற்குவட்டம் ரெட்டியார் சத்திரம் வருவாய் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். சம்பவத்தின்போது பள்ளபட்டி கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்து வந்தேன். கடந்த 05.04.2017ம் தேதி காலை 12.00 மணிக்கு தாலுகா காவல் நிலையத்திலிருந்து ஆய்வாளர் எனக்கு போன் செய்தார். அதன்பேரில் எனது கிராம உதவியாளர் சோசப் என்பவரும் பாறைப்பட்டி சுடுகாடு அருகே அங்கு போலிசார் மார்டோனா என்ற அப்புக்குட்டி என்பவரை போலிசார் விசாரித்தார்கள். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்

ஆகியுள்ளார். எதிரி போலிசாரிடம் 30.03.2017ம் தேதி இரவு சுமார் 10.30 மணிக்கு பித்தளைப்பட்டி பிரிவு அருகே எதிரியும் அவருடன் பாஸ்கர், ஈக்குளி அந்தோனி ஆகியோர்கள் சென்றதாகவும் இவர்கள் மூவரையும் போலிசார் விசாரித்தபோது போலிசாரிடம்இருந்து தப்பிப்பிப்பதற்காக போலிசாரின் கையை மார்டோனா வெட்டியதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதன்பின் எதிரி மார்டோனா , ஈக்குளி என்ற அந்தோணியை அடையாளம் காட்ட மாலை 05.30 மணிக்கு போலிசார் அவரை பிடித்துவிட்டார்கள். பின் அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது உதவியாளர் ஜோசப் என்பவரும் கையொப்பம் செய்தோம், எதிரியிடம் ரூ.300 பணத்தை கைப்பற்றினார்கள். பாறைப்பட்டியில் உள்ள பித்தளைப்பட்டி பிரிவு அருகே எதிரி முட்புதரில் இருந்து கத்தியை எடுத்து ஆஜர்படுத்தியதை போலிசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். பின் ஈக்குளி என்ற அந்தோணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர்படுத்திய Jupiter வாகனம் , கைக்கடிகாரம், பணம் ரூ.300 ஆகியவற்றை போலிசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். ராயப்பட்டியில் உள்ள முட்புதரில் எதிரி ஈக்குளி என்ற அந்தோணி ஆஜர்படுத்திய கத்தியை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். எதிரி ஈக்குளி என்ற அந்தோணியை பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட தெரியும் . அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. (எதிரி ஈக்குளி என்ற அந்தோனி ஆஜரில்லை அவருக்காக அவரது வழக்கறிஞர் 317 Crpc மனு தாக்கல் செய்யப்பட்டு இன்று அவரது வருகைக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது) இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் எங்களை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் எதிரி மார்டோனா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் நகலில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் எதிரி ஈக்குளி என்ற அந்தோனி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் நகலில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். (தாலுகா காவல் நிலைய குற்ற எண்.151/2017 ல் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த வழக்கு பற்றியும் மேற்படி எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கப்பட்டு வழக்கு சொத்துக்கள் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டுள்ளன. குற்ற எண்.151/2017 PRC No.2/2018 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்திற்கு committal செய்து அனுப்பப்பட்டுள்ளது. இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியின் அசல் குற்ற எண்.151/2017 வழக்கு ஆவணங்களுடன் அனுப்பி வைக்கப்பட்டதாக தெரியவருகிறது. எனவே அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி மேற்படி ஆவணங்களின் உண்மை நகல் பெற்று சான்றாவணமாக குறியீடு செய்வதற்காகவும்

வழக்கு கோப்பினை முழுமையாக பரிசீலனை செய்வதற்காகவும் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.03.25 18:24:13 +0530

Judicial Magistrate No.I
Dindigul.